TAMIL INFORMATION SERVICE

TIS

தமிழ் தகவல் சேவை

தமிழகத்தில் தமிழ்ப்பயன்பாடு - தமிழர்களின் முதற் பணி

தமிழின் சிறப்பை புலவர்கள்,அறிஞர்கள்,மொழி ஆயவாளர்கள்,ஒபபியல் மொழி மாணவரகள் போன்றோர் அறிந்துள்ளனர். பெருவாரியான தமிழ் மக்களுக்கு இந்த உணர்தல்,அறிதல் உண்டா? மொழியின் அடிப்படைப் பயனே பண்பாட்டு இயல்புடன் கருத்து, செய்தி,இவைகளின் பரிமாற்றமே. மொழிதிரிந்து விட்டால் பண்பாடும் திரியும்,நாகரிகம் மாறுபடும். தமிழ்ப் பண்பாடுச் சிதறல், அல்லது சிதைவு இல்லாமல் காக்க வேண்டியது தனித்தமிழ் அல்லது திருந்திய மொழியின் பணி.

தமிழின் தொன்மை, சிறப்பு இவைகள் உணர்நதோர் நாள்தோறும் இம்-மொழியின் பயன்பாட்டை அதிகரிக்க வழிகளைத் தேடி, அபபயன்பாட்டினைப் பரப்ப வேண்டும். தமிழினத் தலைவர்கள்,கருத்துகள் உருவாக்கி அவற்றைப் பரப்ப வல்லவர்கள், ஆசிரியர்கள்,குடும்பத்தலைவர்கள் அனைவரும் கூடி தங்கள் கருத்துக்களை நடைமுறை படுத்த வழிகள் காணவேண்டும். இவ்வழிகள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

தொடக்க மற்றும் உயர்நிலை,மேல்நிலைப்பள்ளிகளில் தமிழே பயிற்ற மொழியாகச் செய்யவேண்டும்.

நடைமுறை வழிகள்:

1.தமிழகத்து தொலைக்காட்சி, திரைப்படத்துறை, பத்திரிகைத் துறை என்று எல்லாத் துறைகளிலும் திருந்திய தமிழே பயன்பட வேண்டும் - இதற்கான நடைமுறை-எந்த படைப்பு, திருந்திய தமிழை சிதைக்கிறதோ அதைப்புறக்கணிக்க வேண்டும்.வெளியிடும் ஆசிரியர்,அலுவலர், தொலைக்காட்சியகத்திற்கு நேரில் சென்று அமைதியான வகையில் நமது எதிர்ப்புகளைக் காட்டவேண்டும்.

2.தமிழ் அமைப்புகள் ஆசிரியர்கள் பத்திரிகைகள் திருந்திய தமிழ் இல்லாமல் கட்டுரை,தலையங்கங்கள்,தலைப்புச் செய்திகள் வெளியிட்டால்,கண்டனக் கடிதம் எழுதவேண்டும் 2 வாரங்களுக்குள் பத்திரிகைகள் மாறாவிட்டால் பத்திரிகைப் புறக்கணிப்புசெய்யவேண்டும் பத்திரிகை அலுவலம் முன்பு அமைதிப் போராட்டம் செய்யவேண்டும்.

3.அனைத்து பள்ளிகளிலும் ஆத்திச்சூடி,கொன்றை வேந்தன்,மூதுரை,நல்வழிநறுந்தொகை,நன்னெறி, உலக நீதி பாடல்கள் இடம் பெறவேண்டும், அப்பாட்டுகள்அனைத்து மாணவர்களுக்கும் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

4.அனைத்துப் பெண்களுக்கும் மொழிப்பயிற்சியோ, ஆங்கிலப் புலமையோ நமக்குவேலை தேடித் தராது என்று விளக்க வேண்டும்.ஆங்கிலம் படிப்பதாலும் ஆங்கில வழியில் கற்பதாலும் மேம்பாடு கிடைக்கும் என்ற மாயையிலிருந்து மக்கள் ’விடுபட வேண்டும். பெருவாரியான குடும்பங்களில் அன்னையரே ஆங்கில வழிக்கல்வி தங்கள் குழந்தைகளுக்குத் தேவை என நினைக்கும் நிலை மாறவேண்டும்.

5.தமிழ் மக்கள் தமிழக அரசுக்கு ஒரு கடமை உள்ளது என்று வலியுறத்த வேண்டும்.தமிழ் வழியாக பள்ளி,கல்லூரி, தொழிற்படிப்பு முடித்தவர்களுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை உண்டு என்று அறிவிக்க வேண்டும்.

6,எல்லா நீதி மன்றங்களிலும் தமிழே மன்ற மொழியாக விளங்க வேண்டும் என சட்டசபை மூலம் தீர்மானம் நிறைவேற்றி அதை மைய அரசு, உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளச் செய்யவேண்டும.

7.வழிபாடு செய்வதற்கு ஏற்ற மொழி தாய்மொழியே. விவேகானந்தர் பேசியது நினைவில் வைக்கவேண்டும்“ ஒவ்வோர் இனத்தாரிடமும் அவர்களின் மொழியில் பேசினால்தான் நாம் பேசுவது அவர்கள் உள்ளத்தில் சென்றுபதியும் இதுதான் நியாயமானது” (பக்கம் 6, சகோதர சகோதரிகளே, இராமகிருட்டிண மடம், சென்னை 600 004. பிப்ரவரி 2002) கடவுள் வழிபாடு செய்யும் யாராவது தங்கள் கடவுள் வேறினம் என நினைப்பார்களா? நம்பிக்கை உடைய அனைவரும் சிவனையோ மாலையோ அவர்களது இனக் கடவுள் என்றுதானேவழிபடுகிறார்கள்? என்றாவது கடவுள் “என்னிடம் வடமொழியிலேயே வழிபடுவாயாக” என்று கூறியதாக செய்தி உண்டா? இதைப் பூசாரிகள், அறங்காவலர்கள் மறுத்தால் கோயில் வெளியே நின்று கூட்டமாக வழிபாடுசெய்யுங்கள். வீடுகளில் எளிய முயையில் பூக்கள், பச்சிலை இவைகளைக் கொண்டுவழிபாடு செய்யுங்கள் நம்பிகையற்றோர் இதற்கு ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது, தமிழச் சமயங்களில் நம்பா மதம் என்பது ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரிவுதான்.

8. திருக்குறள், தேவாரம், திருவாசகம், நாலாயிர தெய்வப்பனுவல் (திவ்வியப் பிரபந்தம்) திரு அருட்பா போன்ற சிறந்த பாட்டுக்களை இசையோடு எல்லா மக்களுக்கும் கற்றுத் தர முயலுங்கள், இசை அனைவரையும் ஈர்த்து, அவ்விசை மூலம் தமிழோசை தேனாகப் பாயும், வளரும்.

9.திருமணம், பூப்பெய்துதல் குழந்தை பிறப்பு, இறப்பு என்ற அனைத்து குடும்ப, சமூக நிகழ்ச்சிகளுக்கும் தமிழே பயன்படவேண்டும். உலகத் தமிழர் பேரமைப்பு இதை ஒரு கடமையாக ஏற்று விழா நடைமுறைகளை எளிதாக்கி அச்சிட்டுக் கொடுக்க வேண்டும. சைவரோ, வைணவரோ, தமிழர் திருமணம் என்றால் மங்கல இசை, புதுமட்குடம், விளக்கு,மலர்கள், மங்கல நாண் என்ற அடிப்படைக் கூறுகள் அமைந்திருக்க வேண்டும், பெண்கள் பாடுவது, வாழ்த்துவது, திருமண ஆசிரியர் (மணவிழா நடத்தும் பெரியவர்/அறிஞர்/புலவர்) ஒவ்வொரு படியாக திருந்திய தமிழில் பேசி (ஒலி பெறுக்கியும் பயன்படலாம்) திருமணம் நடைபெறறால் இந்த ஆயிரங்காலத்துப்பயிர் எவ்வளவு சிறப்பாக வேரூன்றி வளரும் ? என்று கூறவும் வேணடுமோ !

எக்காரணம் முன்னிட்டும் மெல்லிசை என்ற போர்வையில் வல்லோசைகூப்பாடுகளும், காதைப்பிளக்கும் கருவி ஓலங்களும் அனுமதிக்கக்கூடாது. அழகான வீணை, புல்லாங்குழல்,மத்தளம் நாகசுரம் என்ற தமிழிசைச் கருவிகள் மூலமாகவும் மிடற்றிசை (வாய்பாட்டு )மூலமாக மணமக்களையும், விருந்தினர்களையும் மகிழ்விக்கலாம்.

10.சமூக விழாவாகிய பொங்கல், போகித் திருநாள் முதற் பெருக்கு, என்ற நிகழ்ச்சிகளும் முழுமையாக தமிழ் விழாக்களாக மாறவேண்டும்.

11,தமிழ் பேச்சுப்போட்டி, எழுத்துப்போட்டி, நாடகப்போட்டி, இசைப்போட்டி, ஆண்டுதோறும் பள்ளிகளில் -கல்லூரிகளில் இவை நடத்தப் பெற வேண்டும்,

உயர் தனிச் செம்மொழி என்று மைய அரச அறிவிப்பது நாளடைவில் நடைபெறும் நமது முதல் தேவை தமிழ் நாட்டில் தமிழை பயன்பாட்டு மொழியாக நடைமுறைப்படுதததுவதே மொழிப்பற்று என்றுமே வெறியல்ல. ஒவ்வொரு இனமக்களின் அடையாளமும் மொழியே. மக்களின் பெருவாரியான விருப்பம் நடைமுறையானால் அரசுகள் தாமாகவது மொழிப் பயனை நடைமுறைப்படுத்தும். இன்றே தொடங்குவோம்.

செ.நெ.தெய்வநாயகம்

செயலர் நாயகம்
உலகத் தமிழர் பேரமைப்பு

http://www.tamilinfoservice.com/